# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.132/2019

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 13 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 13.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. உத்திராபதி (DW–3 ) | வயது | : | 65 /2026 |
| க/த பெயர் | : | திரு. ரத்தினம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | நெம்மேலி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதி உறவினரா என்றால் இல்லை. தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேனா என்றால் எழுத்து கூட்டி படித்து பார்த்தேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் சொல்லியது என்றால் நான் சொல்லி எழுதப்பட்டது. யார் யார் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதி மீது நிலத்தின் உரிமையாளர் வழக்கு தாக்கல் செய்தார். நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு நான் விவசாய வேலை செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.
2) பிரதிவாதியிடம் வேலை பார்ப்பதற்கு கூலி கொடுப்பார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 19/1A/, விஸ்தீரணம் 2 மா. நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் வடப்புறம் கன்னி, மேற்புறம் ரோடு, கிழக்கு புறம் எனது வயல், தெற்கு புறம் ரோடு உள்ளது. எனது சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 19/2A. தாவா சொத்தை கணேசன் கிரயம் வாங்கியதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அதற்கான ஆவணத்தை

பார்த்தேனா என்றால் இல்லை. அந்த ஆவணங்களில் சாட்சி கையெழுத்திட்டேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:23:29 +0530

District Munsif
Mannargudi.